**சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்**
**முன்னிலை திருமதி.கி.காயத்ரி,எம்.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி, உத்தமபாளையம்**
**2015ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**அ.வ.எண்.49/11**

முருகேசன் -வாதி

/எதிர்/

1. பெருமாயி
2. ராஜா
3. ராஜேந்திரன்
4. பாண்டியராஜன் -பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்னர் 12.8.2015ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.மாரியப்பமுரளி அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.ஜார்ஜ் அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.ஏசுதிருச்செல்வம் அவர்கள் ஆஜராகியும், 3,4ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.ஜோதிமுருகதாஸ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதஉரைகளை கேட்ட பின்னர் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

WEB COPY

## தீர்ப்பு ரை

வழக்குரைச் சொத்தானது வாதிக்கு மட்டுமே தனித்துப் பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், அதன் காரண பரிகாரத்தமாக வழக்குரைச் சொத்தில் உள்ள வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு பிரதிவாதிகளோ, அவர்களது வகை ஆட்களோ, எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கும்படிக்கும் மற்றும் செலவுத் தொகை கேட்டும், வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வழக்குரையின் சுருக்கும்**

வழக்குரைத் சொத்தானது ஆதியில் வெள்ளையத்தேவர் என்பவருக்குப் பாத்தியப்பட்டு, அவருடைய சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தது. வழக்குரைச் சொத்தானது, வெள்ளைத்தேவரின் மூத்தத்தாரத்து பிள்ளைகளான 3ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதியின் தகப்பனாரான லேட். நாகமணி மற்றும் மேற்படி வெள்ளையத்தேவரின் இளையத்தாரத்து பிள்ளைகளான 2ம் பிரதிவாதி, கணேசன் ஆகியோர்களுக்கிடையில் நடைபெற்ற பதிவு பாகப்பத்திரத்தின்படி வழக்குரைச் சொத்தானது டி ஷெட்யூல் பாகமாக 2ம் பிரதிவாதிக்கும் அவரது உடன்பிறந்த சகோதரரான கணேசன் என்பவருக்கும் கிடைத்து, கூட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தது. இந்நிலையில் 2ம் பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரரான கணேசன் என்பவர் வழக்குரைச் சொத்தை பொறுத்து எவ்வித விருப்புறுதி ஆவணங்களும் எழுதி வைக்காமலும், திருமணம் எதுவும் செய்யாமலும், 2ம் பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரரான கணேசன், தன் தாயாரான 1ம் பிரதிவாதியை மட்டும் வாரிசாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். அதன்படி வழக்குரைச் சொத்தானது 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு, அவர்களின் கூட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தது. இந்நிலையில் 1ம் பிரதிவாதி மேற்படி வழக்குரைச் சொத்தினை 2ம் பிரதிவாதிக்கு வாக்கறாலாக விடுதலை செய்து கொடுத்துவிட்டார். அதன்படி வழக்குரைச் சொத்தானது 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு, அவரது சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தது. அதன்பின் 2ம் பிரதிவாதி ராமசாமித்தேவர் மகன் ஒச்சாத்தேவர் என்பவருக்கு 10.9.2001ம் தேதியில் ஓர் பதிவு ஜெனரல் பவர் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டார். அதன்படி மேற்படி வழக்குரைச் சொத்தை ஒச்சாத்தேவர் தன் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்தார். மேற்படி ஒச்சாத்தேவர், பதிவு ஜெனரல் பவர் பத்திரம் ஊர்ஜிதத்தில் இருக்கும்போதே, வழக்குரைச் சொத்தை வாதிக்கு கடந்த 27.6.2006ம் தேதி கிரையம் செய்து கொடுத்துவிட்டார். அதன்பின்

WEB COPY

வழக்குரைச் சொத்தானது வாதியின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது. வழக்குரைச் சொத்திற்கு மேற்குப்புரம் 4ம் பிரதிவாதியின் தகப்பனாரான லேட்.நாகமணியின் பாகநிலம் உள்ளது. மேற்படி நாகமணியின் பாக நிலமானது வழக்குரைச் சொத்தில் தான் உள்ளது என்றும், அதனால் வழக்குரைச் சொத்தானது 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் கூறிக்கொண்டு வாதியின் அமைதியான சுவாதீனத்தில் இடையூறுகள் செய்ய முற்பட்டு வந்தார்கள். எனவே வாதி வழக்குரை சொத்தைப் பொறுத்து விளம்புகைப்பரிகாரமும், அதன் காரண பரிகார்த்தமாக வழக்குரை சொத்தில் உள்ள வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு, பிரதிவாதிகளோ, அவர்களது வகை ஆட்களோ, ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

3. **<u>1ம்பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

வாதி வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதாகும். தாவா சொத்தில், டி செடியூலில் 1 ஏக்கருக்குப் பதிலாக 80 செண்டு நிலம் தான் இருந்து, அது 2ம் பிரதிவாதிக்கும், கணேசனுக்கும் பாத்தியப்பட்டு, கூட்டு சுவாதீனம் அடைந்து அனுபவித்து வந்தார்கள். அதேபோல் சி செடியூலில் 74 செண்டிற்கு பதிலாக 54 செண்டு நிலம் தான் இருந்து சுவாதீனம் எடுக்கப்பட்டது. கணேசன் என்பவர் இறந்தபிறகு டி செடியூலில் உள்ள 80 செண்ட் நிலமானது 1ம் பிரதிவாதிக்கு 40செண்ட் பாத்தியப்பட்டு, சுவாதீனம் அனுபவிக்கப்பட்டது. மேற்படி சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி, யாரிடமும் எந்தவொரு தொகையும் பெறவில்லை, யாருக்கும் எந்தவித ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை. மேற்படி 80 செண்ட் நிலத்தில் 1ம் பிரதிவாதி கூட்டு உரிமையாளர் ஆவார். வழக்குரைச் சொத்தானது இன்றைக்கும் விவசாயம் செய்யப்படாமல் பிரிவினையில்லாமல் உள்ளது. 1ம் பிரதிவாதி கைரேகை வைக்கக்

கூடியவர், எனவே பவர் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்ததாக கூறுவது பொய்யாகும். 27.6.2006ம் தேதி வாதி மேற்படி சொத்தை கிரையம் பெற்று அவரது சுவாதீன அனுபவத்தில் இருப்பதாக கூறுவது பொய்யாகும். மேற்படி கிரைய பத்திரமானது, வாதியும் அவரது தந்தையும் வழக்குரைச் சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட பொய்யான ஆவணமாகும். வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை. வழக்குரையில் சொல்லப்பட்ட வழக்குமூலம் பொய்யானது. எனவே 1ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

4. **<u>2ம்பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

WEB COPY

வாதி வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதாகும். தாவா சொத்தில், டி செடியூலில் 1 ஏக்கருக்குப் பதிலாக 80 செண்டு நிலம் தான் இருந்து, அது 2ம் பிரதிவாதிக்கும், கணேசனுக்கும் பாத்தியப்பட்டு, கூட்டு சுவாதீனம் அடைந்து அனுபவித்து வந்தார்கள். அதேபோல் சி செடியூலில் 74 செண்டிற்கு பதிலாக 54 செண்டு நிலம் தான் இருந்து சுவாதீனம் எடுக்கப்பட்டது. கணேசன் என்பவர் இறந்தபிறகு டி செடியூலில் உள்ள 80 செண்ட் நிலமானது 1ம் பிரதிவாதிக்கு 40செண்ட் பாத்தியப்பட்டு, சுவாதீனம் அனுபவிக்கப்பட்டது. மேற்படி சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு வாக்கறாலாக விடுதலை செய்து கொடுத்ததாக கூறப்படுவது பொய்யாகும். மேற்படி 80 செண்ட் நிலத்தில் 1ம் பிரதிவாதி கூட்டு உரிமையாளர் ஆவார். வழக்குரைச் சொத்தானது இன்றைக்கும் விவசாயம் செய்யப்படாமல் பிரிவினையில்லாமல் உள்ளது. 1ம் பிரதிவாதி கைரேகை வைக்கக் கூடியவர், எனவே பவர் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்ததாக கூறுவது பொய்யாகும். 27.6.2006ம் தேதி வாதி மேற்படி சொத்தை கிரையம் பெற்று அவரது சுவாதீன அனுபவத்தில் இருப்பதாக கூறுவது பொய்யாகும். மேற்படி கிரைய

பத்திரமானது, வாதியும் அவரது தந்தையும் வழக்குரைச் சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட பொய்யான ஆவணமாகும். வாதியின் தந்தை ஒச்சாத்தேவர் கந்துவட்டி லேவாதேவி செய்பவர். வாதியின் தகப்பனாரிடம் 2ம் பிரதிவாதி 10.9.2001ம் தேதி அன்று அவசரநிமித்தமாக ரூ.50,000/-ம் கடனாக பெற்று, மேற்படி கடன் தொகைக்கு 48% வீதம் வட்டி செலுத்த கேட்டதின்படி மேற்படி கடனின் பொறுப்பிற்காக எழுதிக்கொடுக்கப்பட்டது தான் பவர் பத்திரம். பத்திரம் எழுதும் போது முந்திய பாகப்பத்திரத்தைக் காட்டி கடனின் பொறுப்பிற்காக எழுதப்பட்டதால்தான் 80 செண்டிற்கு பதிலாக 1 ஏக்கர் என்று எழுதப்பட்டுள்ளது. மேலும், மேற்படி கடனுக்கு ஆதரவாக 2 வெற்றுப் புரோநோட்டுகளும், 1 வெற்று பத்திரக் காகிதத்திலும் பிரதிவாதியிடம் கையெழுத்து மட்டும் வாங்கிக்கொண்டார். மேற்படி கடனுக்கு பிப்ரவரி 2006 வரை வட்டி கொடுக்கப்பட்டு, பின் குடும்ப கஷ்டம் காரணமாக வட்டி செலுத்தப்படவில்லை. அதனைப் பயன்படுத்தி மேற்படி ஒச்சாத்தேவர் அவரது மகனான வாதியின் பெயரில் வழக்குரை சொத்தை கிரையப் பத்திரம் உற்பத்தி செய்து, அதன் அடிப்படையில், இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே 2ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

WEB COPY

5. **<u>3,4ம்பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

4ம் பிரதிவாதி தாக்கல் செய்யும் எதிர்வழக்குரையை 3ம் பிரதிவாதி ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை செய்யப்பட்டுள்ளது. வழக்கில் 4ம் பிரதிவாதியின் பெயர் பாண்டியராஜன் என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. பாகப் பத்திரத்தில் 4ம் பிரதிவாதியின் தந்தை நாகமணி என்பவரும் ஓர் பாகஸ்தராக இருந்து அவருக்கு சி-செட்டியூல் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. டி-செட்டியூல் பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்து 2ம் பிரதிவாதியான ராஜா மற்றும் அவரது சகோதரர் கணேசன் என்பவருக்கு

ஒதுக்கப்பட்ட சொத்தாகும். நாகமணி கடந்த 8.2.2001ம் தேதி இறந்த பிறகு, 4ம் பிரதிவாதி, அவரது தாயார் பசுபதி, சகோதரர் பிரகலாதன் ஆகிய மூவரும் அடைந்து அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்து இருக்கின்ற சர்வே எண்.1603/1ல் உள்ள நிலம் 1ஏக்கர் 74 செண்டு நிலம் என பாகப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது. அதன் மேற்குப் பக்கம் 74 செண்டு நிலம் சி-செட்டியூலில் நாகமணிக்கும் கிழக்குப் பக்கம் 1 ஏக்கர் நிலம் டி-செட்டியூல் ராஜா, கணேசன் என்பவருக்கும் ஒதுக்கப்பட்டு நடுவில் அத்துமால் செய்யப்பட்டது. பாகப்பத்திரம் 1603/1 சர்வே எண்ணில் 1 ஏக்கர் 74 செண்டு நிலம் உள்ளதாக காட்டப்பட்டிருந்தாலும் உண்மையில் குறைவான அளவு மட்டுமே இருந்துள்ளது. அதனடிப்படையில் சி-செட்டியூல்தார் நாகமணிக்கு 74 செண்டு நிலமும், டி-செட்டியூல்தார் ராஜா, கணேசன் இருவருக்கும் குறைவான நிலம் மட்டுமே ஒதுக்கப்பட்டு அத்துமால் செய்யப்பட்டு அனுபவித்து வந்துள்ளார்கள். மேற்படி சி மற்றும் டி செட்டியூல் ஒதுக்கப்பட்ட நில அமைப்புக்கு ஏற்ப அவற்றின் மதிப்பை கணக்கிட்டு சி-செட்டியூல்தாருக்கு அளவு அதிகமாக நிலம் ஒதுக்கப்பட்டது. வழக்குரை டி-செட்டியூல் சொத்தை பொறுத்து, வாதி, பிராதில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதாகும். டி-செட்டியூல் பாகமாக ராஜாவுக்கும் கணேசனுக்கும் ஒதுக்கப்பட்ட நிலத்தில் ராஜாவுக்கு சரிபாதி நிலம் மட்டுமே பாத்தியமானது. அதற்கு அதிகமாக அவர் பவர் கொடுத்ததோ அதன்மூலம் வாதி கிரையம் பெற்றதோ செல்லத்தக்கதில்லை. கிரையம் பெறும் நபர் தான் கிரையம் பெறும் சொத்து சரியானதா, விற்பவருக்கு பாத்தியம் உள்ளதா, அளவுகள் சரியாக உள்ளதா என பார்க்கும் கடமை அவருக்கே உரியது. வாதிக்கு, அவர் ராஜாவிடம் கிரையம் பெற்ற டி-செட்டியூல்படி 40 செண்ட் நிலத்திற்கு மட்டுமே உரிமை உள்ளது. அதற்கு அதிகமாக 1 ஏக்கர் நிலத்திற்கு உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது. வாதி 4ம் பிரதிவாதிக்கும், அவரது தாயார் பசுபதிக்கும், சகோதரர் பிரகலாதனுக்கும் பாத்தியப்பட்ட சி-செட்டியூல் சொத்தில் உள்ள நிலத்தை அபகரிக்கவேண்டுமென்ற

WEB COPY

எண்ணத்தில் பொய்யான விபரங்களை சொல்லி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். 31.5.2011ம் தேதி வாதி 4ம் பிரதிவாதிக்கு பாத்தியமான மேற்குப் பக்கமுள்ள நிலத்தினை ஆக்கிரமிக்க முயற்சித்து உள்ளார். இது 4ம் பிரதிவாதி மற்றும் உறவினர்களால் தடுக்கப்பட்டுள்ளது. எனவே வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கை 4ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

6. மேற்கண்ட வழக்குரை மற்றும் எதிர்வழக்குரைகளின் அடிப்படையில் இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

1) தாவாச் சொத்து வாதிக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்டதா?
2)வாதி கோரிய விளம்புகை மற்றும் உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
3) வேறு என்ன பிகாரம்?

WEB COPY

7. வாதி தரப்பில் வாசா.1 மற்றும் வாசா2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வாசாஆ.1 முதல் வாசாஆ.4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பிவாசா1 முதல் பிவாசா4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பிவாசாஆ1 சான்றாவணம் குறியீடுச் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற சான்றாவணங்கள் நீமசாஆ1 முதல் நீமசாஆ4 வரை குறியீடுச் செய்யப்பட்டுள்ளது.

8. **<u>எழுவினா 1 மற்றும் 2க்கான தீர்வு</u>**

இவ்வழக்கானது, தாவா சொத்தானது வாதிக்கு 27.6.2006ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் தனித்துப் பாத்தியப்பட்டது என்றும், மேற்படி சொத்தானது வாதியின், சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றும், பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்வதால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் முன்வைக்கப்பட்டது.

9. வாதி வாசா1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாசா1 சாட்சியத்தின்படி, தாவா சொத்தானது ஆதியில் வெள்ளையத் தேவருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றும், வழக்குரைச் சொத்தானது 9.11.1992ம் தேதிய வாசாஆ1 பாகப்பத்திரன்படி 2ம் பிரதிவாதி மற்றும் கணேசன் ஆகியோருக்கு பாத்தியப்பட்டு அனுபவத்தில் இருந்தது என்றும், மேற்படி கணேசன் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டதால், கணேசனின் தாயாரான 1ம் பிரதிவாதிக்கு கிடைத்து, அதன்படி 1, 2ம் பிரதிவாதிகள் கூட்டாக சுவாதீனம் செய்து அனுபவித்து வந்தார்கள் என்றும், பிறகு 1ம் பிரதிவாதி, தன்னுடைய பாகத்தை பொறுத்து 2ம் பிரதிவாதியிடம் உரிய பிரதி பிரயோஜனம் பெற்றுக்கொண்டு 2ம் பிரதிவாதிக்கு வாய்கறாரலாக கொடுத்துவிட்டார். எனவே, தாவா சொத்து முழுவதும் 2ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டு இருந்தது. இந்நிலையில் 2ம் பிரதிவாதி தாவா சொத்தை வாதியின் தந்தை திரு. ஒச்சாத்தேவர் என்பவருக்கு 10.9.11ம் தேதி ஒரு பதிவு ஜெனரல் பவர் பத்திரம் வாசாஆ2 எழுதிக்கொடுத்து விட்டார் என்றும், வாசாஆ2 பவர் பத்திரத்தில் 1ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றும், வாசாஆ2, பவர் பத்திரத்தின் அடிப்படையில், மேற்படி ஒச்சாத்தேவர், தாவா சொத்தினை வாதிக்கு, 27.6.2006ல் தேதிய கிரையப் பத்திரத்தின்படி வாசாஆ3ன்படி கிரையம் கொடுத்து, அதனடிப்படையில் வாதி சுவாதீனம் உரிமை அடைந்து 1 ஏக்கர் நிலத்தை இன்றுவரை அனுபவித்து வருகிறார் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

WEB COPY

10. தாவா சொத்தானது, வாசஆ1 பாகப் பத்திரத்தின்படி 1ம் பிரதிவாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டது என்பதை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளனர் என்று வாதி தரப்பில் வாதிடப்பட்டது. மேலும், 2ம் பிரதிவாதி, திரு. ஒச்சாத்தேவர் எனபவருக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தில் 1ம் பிரதிவாதி கையெழுத்திட்டுள்ளார் என்றும், மேலும், 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு, 10.5.2001ம் தேதியில் தாவா சொத்தை பொறுத்து, வாய்க்கராலாக தன் பாகத்தை விட்டு கொடுத்ததை ஒப்புக்

கொண்டு ஒரு சம்மதப் பத்திரம் வாசாஆ4 எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், வாசாஆ4 ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்ட திரு. கணேசன் என்பவர் வாசா2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளவரின் சாட்சியத்தின் மூலம் வாசாஆ2 ஆவணத்தில், 1ம் பிரதிவாதி சாட்சி கையொப்பமும், தன்னுடைய கைரேகையையும் செய்தார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்று வாதிட்டார். வாசாஆ4ல் உள்ள 1ம் பிரதிவாதியின் கைரேகையை 1ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணமான பிவாசாஆ1 ஆவணத்தில் உள்ள கைரேகையையும் ஒப்பீடு செய்ய கைரேகை நிபுணருக்கு அனுப்பப்பட்டு, மேற்படி கைரேகை நிபுணர் அளித்த அறிக்கையில் வாசாஆ4 உள்ள கைரேகையும், பிவாசாஆ1ல் உள்ள 1ம் பிரதிவாதியின் கைரேகையும் ஒரே நபருடையது என்று கைரேகை நிபுணர் அறிக்கை நீமசாஆ4 மூலமும், 1ம் பிரதிவாதி, தன்னுடைய பிரிக்கப்படாத பாகத்தை வாய்மொழியாக, 2ம் பிரதிவாதிக்கு வாசாஆ4 மூலம் விடுதலை செய்து கொடுத்துள்ளார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்று எடுத்துரைக்கப்பட்டது.

WEB COPY

11. வாதி தரப்பு வாதத்தின் போது, வாசா1 மற்றும் வாசா2ன் சாட்சியத்தின் மூலமும், மற்றும் நீமசாஆ 1 முதல் நீமசாஆ4 சான்றாவணங்கள் மூலமாகவும், தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால், 1ம் பிரதிவாதி தன் பிரதிவாதத்தை ஆவணங்களின் பொருட்டு நிரூபணம் செய்யவில்லை என்றும், 1ம் பிரதிவாதி தன்னுடைய பாகத்தை வாய்க்கராலாக 2ம் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றும், மற்றும் வாசாஆ2 ஆவணத்தில் 1ம் பிரதிவாதி கையெழுத்து செய்யவில்லை என்றும், 1ம் பிரதிவாதிக்கு கையெழுத்து செய்யும் பழக்கம் இல்லை என்றும், கைரேகை தான் 1ம் பிரதிவாதி வைக்கும் பழக்கும் உடையவர் என்றும், அதற்கு ஆதாரமாக பிவாசாஆ1 தாக்கல் செய்துள்ளதாக வாதிட்டு இருந்தாலும், 2ம் பிரதிவாதிக்கு எதிராக 1ம் பிரதிவாதி இதுநாள் வரையில் எந்தவொரு

குற்றவியல் மற்றும் சிவில் வழக்கும் தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்கவில்லை என்பதிலிருந்து, 1ம் பிரதிவாதியின் வாதம் பொய்யானது என்று வாதி தரப்பில் வாதிட்டதை கருத்தில் கொண்டு 1ம் பிரதிவாதி தரப்பு எதிர்வாதத்தை பார்க்கும்போது, 1ம் பிரதிவாதி தரப்பில், 1ம் பிரதிவாதி தன் பாகத்தை 2ம் பிரதிவாதிக்கு வாய்கராலாக பிரதிபிரயோஜனம் பெற்றுக் கொண்டு கொடுத்துவிட்டார் என்றும், மற்றும், அதை உறுதி செய்யும்விதமாக, 1ம் பிரதிவாதி வாசாஆ2 பாகப் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்பது மறுக்கப்பட்டுளள்ளது. மேலும், 1ம் பிரதிவாதி படிப்பறிவு இல்லாதவர் என்றும், அவருக்கு கையெழுத்து போடத் தெரியாது என்றும், 1ம் பிரதிவாதி கைரேகை மட்டும் வைக்கக் கூடியவர் என்றும், எனவே, வாசாஆ2 ஆவணத்தில் உள்ள 1 பிரதிவாதி கையெழுத்து, 1ம் பிரதிவாதியுடையதல்ல என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

12. மேற்படி வாதத்தை நிரூபிக்கும் முகமாக, 1ம் பிரதிவாதி, பிவாசா1 ஆக விசாரிக்கப்பட்டும், 1ம் பிரதிவாதி கைரேகை மட்டும் வைக்கும் பழக்கமுடையவர் என்பதை நிரூபிக்கும் முகமாக, 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரிகளும் 18.11.2009ம் தேதி அன்னக்கொடி என்பவருக்கு எழுதிக் கொடுத்த பதிவு ஆவணம் பிவாசாஆ1 ஆக குறியீடு செய்யப்பட்டுளத்தின் மூலம், வாசாஆ2ல் 1ம் பிரதிவாதி கையெழுத்து, போட்டுள்ளார் என்பது பொய்யானது என்றும், அந்த கையெழுத்து, 1ம் பிரதிவாதி கையெழுத்து அல்ல என்பதும் நிரூபிக்கப்பட்டதாக வாதம் செய்யப்பட்டது. 1ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, வாசாஆ2ல் உள்ள பிரதிவாதியின் கையெழுத்தை வாதி நிரூபிக்காத நிலையில் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

13. அடுத்த வாதமாக, வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள நான்கு மால்களுக்குள் 1 ஏக்கர் விஸ்தீரணமுள்ள சொத்து ஸ்தலத்தில் இல்லை என்றும், ஏனெனில், 80 செண்ட் மட்டும் தான் ஸ்தலத்தில் உள்ளது என்றும், எனவே, வாதி 1 ஏக்கர் சொத்திற்கு பரிகாரம் கேட்க முடியாது என்றும், மேலும், வாசாஆ2 மற்றும் வாசாஆ3 ஆவணங்களின் மூலம் வாதி 1 ஏக்கர் நிலம் சுவாதீனம் அடைந்து அனுபவித்து வருகிறார் என்பதும் பொய்யானது என்று வாதிட்டார்.

14. 2ம் பிரதிவாதி தரப்பில் வாதியின் தந்தையிடம் வாங்கி கடனுக்கு பொறுப்பிற்காக தான் வாசாஆ2 பவர் பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் வாசாஆ2 ஆவணத்தில் கம்பம் எஸ்.ஆர்.ஓ. 3544/92 பாக பத்திரம் மூலம் "டி" செட்டியூலாக பாகம் கிடைத்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் "டி" செட்டியூல் பாகமானது கணேசன் மற்றும் ராஜா ஆகிய இருவருக்கும் உள்ள சொத்து என்றும், எனவே, வாசாஆ2 பவர் பத்திரம் கடன் பொறுப்பிற்காக எழுதிக்கொடுக்கப்பட்டது என்பது நிரூபணம் ஆகிறது என்று வாதிட்டு இருந்தாலும், 2ம் பிரதிவாதி தரப்பில் வாதியின் தந்தையிடமிருந்து பெற்ற கடனுக்கு எவ்வளவு வட்டி தொகை செலுத்தியுள்ளார் என்றும், மற்றும் 2006ம் ஆண்டு வரை வட்டி செலுத்தியதற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யாதிலிருந்து 2ம் பிரதிவாதி கூறுவது போல் கடன் பொறுப்பிற்காக வாசாஆ2 எழுதப்பட்டது என்பது நம்பும்படியாக இல்லை. மேலும், 2ம் பிரதிவாதி தரப்பில் வாசாஆ2 மற்றும் வாசாஆ3 அடிப்படையில் வாதி 1 ஏக்கர் நிலத்தை அனுபவித்து வருகிறார் என்பதற்கு வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையின்படி ஸ்தலத்தில் 80 செண்ட் தான் உள்ளது என்றும், அதேபோல் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் வகையறாவான நாகமணிக்கு 54 செண்ட் இருப்பதும், நீமசாஆ1 முதல் நீமசாஆ 3 ஆவணங்களின் மூலமும் தெளிவாக நிரூபிக்கப்பட்டது

WEB COPY

என்றும், எனவே, வாதி 1 ஏக்கர் நிலத்தை சுவாதீனம் பெற்று அனுபவத்து வருகிறார் என்பது பொய்யானது என்றும் வாதிட்டார்.

15. மேற்படி வாதத்தை நிரூபிக்கும் முகமாக 2ம் பிரதிவாதி பிவாசா3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளவரின் சாட்சியத்தின் மூலமும் வாதி 1 ஏக்கர் நிலத்தை அனுபவிக்க வில்லை என்பதை வாசாஆ2 மற்றும் வாசாஆ3 ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கப்பட்டது.

16. பிரதிவாதிகள் 3 மற்றும் 4 தரப்பில் வாதிடும்போது "டி" செட்டியூல் பாகமாக ராஜாவுக்கும், கணேசனுக்கும் ஒதுக்கப்பட்ட நிலத்தில் 40 செண்ட் நிலம் மட்டும் ராஜாவிற்கு பாத்தியப்பட்டது என்றும் வாசாஆ2 பவர் பத்திரமும், ஒச்சாத்தேவர் வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரமும் பொய்யானது என்றும், மேற்படி ஆவணங்கள் வாதியால் உற்பத்தி செய்யப்பட்டது என்றும், எனவே, வாதி 1 ஏக்கர் நிலத்திற்கு உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க முடியாது என்று எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 1ம் பிரதிவாதி தன் பரிக்கப்படாத பாகத்தை ராஜாவிற்கு வாய்மொழியாக கொடுக்கவில்லை என்றும், ராஜாவிற்கு 40 செண்ட் நிலம் மட்டும் உரிமை உடையது என்றும், 1 ஏக்கர் நிலத்திற்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க இயலாது என்று எடுத்துரைக்கப்பட்டது.

17. இருதரப்பினர்களின் எழுத்துபூர்வமான வாதுரை மற்றும் வாதத்தை கேட்டு அறிந்தும், இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, வாசாஆ3ன் மூலம் தாவா சொத்தை உரிய பிரதிபிரயோஜனம் கொடுத்து ஒச்சாத்தேவர் என்பவரிடமிருந்து வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், மற்றும் வாசாஆ1 பாக பத்திரத்தின்படி "டி" செட்டியூல் பாக சொத்தானது 2ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் கணேசன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டு, கூட்டாக

WEB COPY

அனுபவித்து வந்து மேற்படி கணேசன் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டதால், கணேசனின் பாகமானது 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்று, பின்பு தாவா சொத்தினை 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் கூட்டாக சுவாதீனம் செய்து அனுபவித்து வந்து, 1ம் பிரதிவாதி தனக்கு சொந்தமான பிரிக்கப்படாத பாகத்தை பொறுத்து, உரிய பிரதிபிரயோஜனத்தை பெற்றுக்கொண்டு 2ம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக விடுதலை செய்து கொடுத்துவிட்டதால், 2ம் பிரதிவாதி தாவா சொத்தினை வாசாஆ2 பவர் பத்திரத்தின் மூலம் ஒச்சாத்தேவருக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்து, மேற்படி ஒச்சாத்தேவர் வாசாஆ3ன் முன்னிலையில் வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்பதும், மற்றும் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சம்மத பத்திரம் வாசாஆ4ன் மூலமும், தாவா சொத்தினை வாதி கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

WEB COPY

18. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி கைரேகை மட்டும் வைக்கும் பழக்கம் உடையவர் என்றும், கையெழுத்து செய்யும் பழக்கம் இல்லை என்றும், எனவே, வாசாஆ2ல் உள்ள கையெழுத்து 1ம் பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்று எதிர்வாதம் செய்துள்ளதால், வாதி தரப்பில் 1ம் பிரதிவாதி கைரேகை மட்டும் வைக்கும் பழக்கம் உடையவர் என்று 1ம் பிரதிவாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளதால், 1ம் பிரதிவாதி கையெழுத்தினை ஒப்பிட்டு பார்த்து வாசாஆ2ல் உள்ள 1ம் பிரதிவாதியின் கையெழுத்தை உறுதிச் செய்ய இயலாது என்பதால் வாதி, வாசாஆ4 சம்மத பத்திரத்தில் உள்ள 1ம் பிரதிவாதியின் கைரேகையும் மற்றும் 1ம் பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட கைரேகை உடைய பிவாசாஆ1 ஆவணத்தில் உள்ள கைரேகையையும் நீதிமன்றத்தின் மூலம் கைரேகை நிபுணருக்கு அனுப்பி ஒப்பீடு செய்து தாக்கல் செய்யப்பட்ட கைரேகை நிபுணரின் அறிக்கை நீமசாஆ4 மூலம் வாசாஆ4 ஆவணத்தில் உள்ள கைரேகையும், 1ம் பிரதிவாதியின் கைரேகையும்

இரண்டு கைரேகையும் ஒரே நபர் உடைய கையெழுத்து என்று அறிக்கை வழங்கப்பட்டுள்ளதால், 1ம் பிரதிவாதி தனக்குரிய பிரிக்கப்படாத பாகத்தை ராஜாவிற்கு வாய்மொழியாக கொடுத்துள்ளார் என்பது வாதி தரப்பில் தெள்ளத்தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், 1, 2 பிரதிவாதிகள் ஒச்சாத்தேவருக்கு பவர் பத்திரம் எதுவும் தாவா சொத்தை பொறுத்து எழுதிக்கொடுக்கவில்லை என்று எதிர்வாதம் செய்திருந்தாலும், 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எதிராக எந்த ஒரு குற்றவியல் வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. அதேபோல், 1,2 பிரதிவாதிகள் சேர்ந்து வாதியின் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தையும் மற்றும் வாதிக்கு பதிவு செய்து கொடுத்த ஒச்சாத்தேவர் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட ஜெனரல் பவர் பத்திரத்தையும் செல்லாது என்று கூறி விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யாமல் இருந்துள்ளதிலிருந்தும் பிரதிவாதிகள் தாவா சொத்தினை அபகரிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் எதிர்வாதம் செய்துள்ளது நிரூபணம் ஆகிறது.

WEB COPY

18. பிரதிவாதிகள் வாசாஆ1 பாக பிரிவினையின்படி செய்துகொண்ட பாகச் சொத்து வாசாஆ1ல் கண்டவாறு விஸதீரணம் இல்லாமல் ஸ்தலத்தில் குறைவாக உள்ளது என்றும், மேலும், வாதிக்கு கிரையம் கொடுத்த பிரதிவாதிகள் 80 செண்டு உள்ள நிலத்தை மட்டும் அனுபவித்து வந்தார்கள் என்று எதிர்வாதம் செய்திருந்தாலும், அதை நிரூபிக்கும் முகமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், வாதிக்கு கிரையம் கொடுத்த கிரையத்தாரர்களாக 1, 2 பிரதிவாதிகள் அதாவது வெள்ளையத்தேவரின் மூத்த மனைவியின் மக்களான நாகமணி வகையறா தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.52/11ல் சொத்தின் விஸ்தீரணம் குறைவாக உள்ளது என்று அந்த வழக்கில் குறிப்பிடாததிலிருந்து தாவா சொத்தானது ஸ்தலத்தில் குறைவாக இல்லை என்றும் வாசாஆ1 ல் கண்டபடி 1 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள நிலத்தை 1ம் பிரதிவாதி முழுமையாக அனுபவித்து வருகிறார் என்பது நிரூபணம் ஆகிறது.

20. பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் அறிக்கையின்படியும், 80 செண்ட் தான் ஸ்தலத்தில உள்ளது என்பதும், 3 மற்றும் 4 பிரதிவாதிகளான நாகமணி வகையறாவுக்கு 54 செண்ட் இருப்பதும் நீதிமன்ற ஆவணங்களான நீமசாஆ1 முதல் நீமசாஆ3 ஆவணங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால், வாதி 1 ஏக்கர் நிலத்திற்கு சுவாதீன உரிமை கோரி இருப்பது பொய்யானது என்று வாதிட்டு இருந்தாலும், நீதிமன்ற ஆணையர் அறிக்கையினை பார்வையிட்டபோது, நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை என்ன நிலையில் இருந்ததோ அதன் அடிப்படையில் அளந்துள்ளார் என்பதால், பிரதிவாதிகள் எதிர்வாதத்தின்படி வாதி 84 செண்ட் நிலத்தை மட்டும் அனுபவித்து வந்தார் என்று தீர்மானிக்க இயலாது என்று முடிவு செய்து நீமசாஆ1 முதல் நீமசாஆ3 ஆவணங்களின்படி பிரதிவாதிகள் தரப்பில் எடுத்து வைக்கப்பட்டுள்ள எதிர்வாதம் ஏற்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

WEB COPY

21. மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் வாதி தாவா சொத்தினை வாசாஆ3 கிரையப்பத்திரத்தின் முன்னிலையில் கிரையம் பெற்று 1 ஏக்கர் நிலத்தை ஆண்டு அனுபவித்து வருகிறார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதால், தாவா சொத்தானது வாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்தை பிரதிவாதிகள் வாதியின் சுவாதீன அனுபவத்தை தடை செய்வதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், முடிவு செய்து தாவாவில் வாதி கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்று தீர்மானித்து இந்த எழுவினாக்களுக்கு விடை காணப்படுகிறது.

22. **எழுவினா 3க்கான விடை**

முன் எழுவினாவில் தாவாவில் வாதிகள் கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க இயலாது என்று முடிவு செய்துள்ளதால் இந்த எழுவினாவின் கீழ் வேறு பரிகாரம் எதுவும் வாதிகளுக்கு வழங்க இயலாது என்று முடிவு செய்து விடை காணப்படுகிறது.

இறுதியாக வாதியின் வழக்கு அனுமதிக்கப்படுகிறது. தாவா சொத்து வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், வழக்குரை சொத்தில் வாதியின் சுவாதீன அனுபவத்திற்கு பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. தரப்பினர்களின் உறவுமுறையை கருத்தில் கொண்டு அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

WEB COPY

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்ட பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 18.8.15ம் நாள் இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்

**வாதி தரப்பு சாட்சிகள்**

வாசா1 முருகேசன் (வாதி)
வாசா2 கணேசன்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

வாசாஆ1 9.11.1992ம் தேதிய வழக்குரைச் சொத்தைப் பொறுத்து பதிவு பாகப்பத்திரத்திம் அசல்

| | | |
|---|---|---|
| வாசாஆ2 | 10.9.2001ம் தேதியில் வழக்குரைச் சொத்தைப் பொறுத்து ஒச்சாத்தேவர் என்பவருக்கு 2ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த பதிவு ஜெனரல் பவர் பத்திரம் | அசல் |
| வாசாஆ3 | 27.6.2006ம் தேதி வழக்குரைச் சொத்தைப் பொறுத்து வாதி கிரையம் பெற்றதற்கான கிரையப் பத்திரம் | அசல் |
| வாசாஆ4 | 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த சம்மதப் பத்திரம் | அசல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்**

பிவாசா1 பெருமாயி (1ம் பிரதிவாதி)
பிவாசா2 சர்க்கரை
பிவாசா3 ராஜா (2ம் பிரதிவாதி)
பிவாசா4 ராஜேந்திரன் (3ம் பிரதிவாதி)

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| பிவாசாஆ1 | 18.11.2009ம் தேதி பதிவு செய்யப்பட்ட அன்னக்கொடி என்பவருக்கு கொடுத்த பவர் பத்திரம் | சான்றிட்ட நகல் |

**நீதிமன்ற சான்றாவணங்கள்**

நீமசாஆ1 அட்வகேட்/கமிஷ்னர் வழங்கிய மாதிரி வரைபடம்
நீமசாஆ2 வழக்கறிஞர்/கமிஷ்னர் தரப்பு அறிக்கை
நீமசாஆ3 கம்பம் நகர சார் ஆய்வாளர் (சர்வே) வழங்கிய வரைபடம்
நீமசாஆ4 கையெழுத்து நிபுணர் அறிக்கை (வரிசைகள்)

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்

WEB COPY